நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, திருவில்லிபுத்தூர்.
**முன்னிலை – செல்வி.தி.சுபாஷினி., B.Com., L.L.B(Hons)., L.L.M.,**
நீதித்துறை நடுவர் எண்.II, திருவில்லிபுத்தூர்.
2026 ம் ஆண்டு ஜீலை மாதம் 23 ம் நாள் வியாழக்கிழமை
**குற்றவியல் பல்வகை மனு.619/2026**

ஞானலட்சுமி,
த/பெ.ராஜேஷ் ... மனுதாரர்/சொத்தின் உரிமையாளர்/எதிரி

/எதிரிடை/

1. அரசுக்காக சார்பு ஆய்வாளர்,
மல்லி காவல் நிலைய
குற்ற எண்.78/2026 ... எதிர்மனுதாரர் / குற்றமுறையீட்டாளர்

இம்மனு கடந்த 09.07.2026 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு 10.07.2026 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு 23.07.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, மனுதாரர்/எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.ஹரிஹரன், B.A, LLB, அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் கற்றறிருந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை–2 திருமதி.P.பெத்துரதி, MBA., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் BNSS பிரிவு 497 மற்றும் 503 ன்– கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் வழக்கு சொத்து பி.ஆர்.எண்.313/2026–ல் உள்ள வழக்கு சொத்தை மனுதாரர் வசம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்கக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் மனுவின் சுருக்கம்–**

இம்மனுவின் மனுதாரர்/வாகனத்தின் உரிமையாளர்/எதிரி என்றும், புகார்தாரர் கொடுத்த புகாரின் பேரில் மேற்படி எதிர்மனுதாரர்/ குற்றமுறையீட்டாளரால் குற்ற எண்.78/2026 பிரிவுகள் 316(2)இ 318(4) of BNS Act–ன் கீழ் வழக்கு பதிவு செய்து நிலுவையில் இருந்து வருவதாகவும், மேற்படி வழக்கில் தனக்கு சொந்தாமான TN 72

DY 1211 என்ற பதிவெண் கொண்ட Suzuki Access 125 என்ற எண் கொண்ட இருசக்கரக வாகனம் மேற்படி வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி TN 72 DY 1211 என்ற பதிவெண் கொண்ட Suzuki Access 125 என்ற எண் கொண்ட வாகனத்தை கடந்த 22.01.2026 ம் தேதி சுகைல் ஆட்டோ கன்சலட்டிங் மூலமாக மறு விற்பனை மூலம் குறிஞ்சி கன்சல்ட்டிங் ஏஜென்சியில் மற்றும் குறிஞ்சி ஆட்டோ பைனான்சில் ரூ.60,000/—க்கு இரண்டு வருட தவணைக்கு வாங்கியதாகவும், மேற்படி தவணையை நாளது தேதிவரை செலுத்தி வருவதாகவும், மேற்படி குறிஞ்சி ஆட்டோ பைனான்சில், ம்ேறபடி இருசக்கர வாகனத்தை தகவணைக்கு வாங்கியதால் வாகனத்தின் அசல் ஆர்.சி.புக் குறிஞ்சி ஆட்டோ பைனான்ஸ் வசமே இருந்து வருவதாகவும், எதிர்மனுதாரர் அலுவலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி தனக்கு சொந்தமான வாகனம் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமலும் மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டாமல் நிறுத்தியுள்ளதால், வெயில், மற்றும் மழையினால் மேற்படி இருசக்கர வாகனம் பழுது அடையும் நிலையில் உள்ளது என்றும், மேற்படி தனக்கு சொந்தமான TTN 72 DY 1211 என்ற பதிவெண் கொண்ட Suzuki Access 125 என்ற எண் கொண்ட இருசக்கர வாகனத்தை தன்னிடம் ஒப்படைக்கும் பட்சத்தில் மேற்படி வாகனத்தை விற்பனையோ ஒத்தியோ, அடமானமோ மற்றும் நிறம் மாற்றவோ செய்யமாட்டேன் என உறுதி கூறியதாகவும், மேலும் நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளை தவறாமல் கடைபிடிக்க தயாராக உள்ளதாகவும், மேற்படி வாகனத்தை இடைக்காலமாக தன்னிடம் ஒப்படைக்க வேண்டி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3. அரசு தரப்பில் எதிர்மனுதாரர் தரப்பில் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வழக்கின் சொத்தை மனுதாரரிடம் திரும்ப கொடுக்கும்பட்சத்தில் அவர் அதனை விற்று பணமாக மாற்றம் செய்யக்கூடும் என்பதாலும், உருமாற்றம் செய்யக்கூடும் என்பதாலும், மேற்படி இருசக்கர வாகனத்தை வழக்கு விசாரணையின் போது ஆஜர் செய்யாமல் இருப்பதற்கும் வாய்ப்பு உள்ளது என்று கூறி ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

4. மனுதாரர் தரப்பில், மனுதாரரின் ஆவணமான ஆதார் அட்டை நகல், ஆர்.சி.புத்தகத்தின் நகல், குறிஞ்சி ஆட்டோ பைனான்ஸ் நிறுவனத்தின் ரசீது ஆகியவை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. தற்போது நீதிமன்றத்தின் முன்பு எழுந்துள்ள வினா மேற்படியான மனுவை அனுமதிப்பதா வேண்டாமா என்பதே ஆகும்.

6. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மேற்படி ஆதார் அடையாள அட்டை மற்றும் TN 72 DY 1211 என்ற பதிவெண் கொண்ட Suzuki Access 125 என்ற எண் கொண்ட இருசக்கர வாகனத்தின் ஆர்.சி.புத்தகத்தை பரிசீலனை செய்ததில் மேற்படி இருசக்கர வாகனத்தினை மனுதாரர் சுகைல் ஆட்டோ கன்சல்ட்டிங் என்ற நிறுவனம் மூலம் மறுவிற்பனையில் வாங்கி குறிஞ்சி ஆட்டோ பைனான்ஸ் நிதி நிறுவனத்தில் அசல் ஆர்.சி.புத்தகத்தை வைத்து பணம் பெற்றுள்ளதால், ஆர்.சி.புத்தம் மேற்படி நிதி நிறுவனத்தில் உள்ளதாக கூறியுள்ளார். அதனால் மேற்படி நிதிநிறுவனத்திற்கு நீதிமன்றத்திலிருந்து அறிவிப்பு அனுப்புமாறு உத்தரவிடப்பட்டிருந்த நிலையில், மேற்படி நிதிநிறுவனத்தின் ஊழியராக வேலை செய்து வருபவரான பாலகிருஷ்ணன் என்பவர் கடந்த 17.07.2026 அன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி மனுதாரர் கூறியுள்ளவாறு அவர்களது இருசக்கர வாகனத்தின் அசல் ஆர்.சி.புத்தகம் தங்களிடம் தான் உள்ளது என்றும், மேற்படி வாகனத்தை மனுதாரர்/வாகன உரிமையாளரிடம் ஒப்படைப்பு செய்வதில் தங்களுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்று கூறி பிரமாண பத்திரம் ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

7. மேற்படி இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட TN 72 DY 1211 என்ற பதிவெண் கொண்ட Suzuki Access 125 என்ற இருசக்கர வாகனமானது நீதிமன்றத்தில் ஒப்படைத்து PR.No.313/2026 கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் அரசு தரப்பில் மனுதாரர் தான் மேற்படி இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் என்பது குறித்து ஆட்சேபணை தெரிவிக்கப்படவில்லை. மேலும் மனுதாரர் அவரது மனுவுடன் தாக்கல் செய்துள்ள உறுதிக்கூற்றில் வழக்கு சொத்தான இருசக்கர வாகனத்தை நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஆஜர்படுத்துவதாக உறுதி கூறியுள்ளார். வழக்கு சொத்தை உபயோகப்படுத்தப்படாமல் இருந்தால் அதன் பயன்பாடும், மதிப்பும் குறைந்து விட வாய்ப்பும் உள்ளது. மேலும் மாண்பமை உச்ச நீதிமன்றம் சுந்தர்பாய் அம்பாலால் தேசாய் –எதிர்– குஜராத் மாநிலம் 2002 (10) SCC 283 என்ற வழக்கில் சொல்லியுள்ள கோட்பாட்டினை கருத்திற் கொண்டும், கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் மேற்படி

இருசக்கர வாகனத்தை அதன் உரிமையாளரான மனுதாரரிடம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைப்பு செய்ய உத்தரவிடப்படுகிறது.

1. வழக்கு சொத்துக்கு ஈடாக மனுதாரரும், இரண்டு ஜாமீன்தாரர்களும் தலா ரூ.60,000/—க்கு பிணை பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

2.வழக்கு சொத்தை முழுமையாக காட்டக்கூடிய அனைத்து பரிமானங்களிலிருந்தும் எடுக்கப்பட்ட புகைப்படத்தை தாக்கல் செய்ய வேண்டும். அதற்கான பாரதிய சாக்சய அதினியம் பிரிவு 63—ன் கீழான சான்றிதழை தாக்கல் செய்யவேண்டும்.

3. அசல் வழக்கு முடியும் வரை வழக்கு சொத்தை விற்பனை செய்யவோ, அடமானம் வைக்கவோ, வேறு வில்லங்க விவகாரத்தில் ஈடுபடுத்தவோ கூடாது.

4. வழக்கு விசாரணையின் போது வழக்கு சொத்துக்களை ஆஜர்படுத்த வேண்டும்.

5. வழக்கு சொத்துக்கு பஞ்சநாமா தயார் செய்து தாக்கல் செய்யப்பட வேண்டும்.

6. மேற்படி நிதி நிறுவனத்தில் நிலுவை தொகை செலுத்திய பின்பு TN 72 DY 1211 என்ற பதிவெண் கொண்ட Suzuki Access 125 என்ற இருசக்கர வாகனத்தின் அசல் ஆர்.சி.புத்தகத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும்.

இந்த உத்தரவு என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஆண்டு ஜீலை திங்கள் 23ம் நாளாகிய இன்று அவையறிய பகரப்பட்டது.

-Sd/-Ms.T.Subashini-
நீதித்துறை நடுவர் எண்.2
திருவில்லிபுத்தூர்.